## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## வவுனியா மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜுலை 15 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றொன்று சமர்பித்திருக்கவில்லை.

(இ) சபையினால் பிரதான பேரேடு, பரீட்சை மீதி மற்றும் வருமானச் செலவு தொடர்பாக பண அளவீட்டு எண்ணக்கரு இனை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பின்வரும் விடயங்கள் தொடர்பாக பிரதான பேரேட்டில், பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | தொகை |
|---|---|
| | ரூபா. |
| உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் | 14,585,437 |
| உள்ளூராட்சி ஆணையாளரிடம் பெறவேண்டிய மூலதன மானியம் | 7,297 |

(உ) ஐந்தொகையில் திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்கங்கள் ரூபா 126,969,951 தொகை என காட்டப்பட வேண்டும் எனினும் ரூபா 129,969,951 தொகை என காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 1,099,010 இனை பதவியணி கடன்பட்டோர் அட்டவணையுடன் இணக்கஞ் செய்திருக்கவில்லை.

(ஆ) பதவியணிக் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,174,350 இற்கான கடன் மீதி கடன் பதிவேட்டின் மாதாந்த மீதியுடன் இணக்கஞ் செய்திருக்கவில்லை.

(இ) பிரதேச நிதிப் பிரமாணங்களின் பிரிவு 143 இன் கீழ் ஆக்கப்பட்ட 1989 நிதி மற்றும் நிருவாக விதியின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புக்கள் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ஆகிய ரூபா 6,477,094 இனை தனிப்பட்ட வைப்பு மீதிகளுடன் இணக்கஞ் செய்திருக்கவில்லை.

(ஈ) பாதுகாப்பு வைப்புக்கள், கேள்வி வைப்புக்கள் மற்றும் பலவின வைப்புக்கள் போன்ற வைப்புக்கள் தொடர்பாக வேறாக தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை அத்துடன் வைப்புக்களில் ஒவ்வொரு மீதியும் பிரதான பேரேட்டில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கைகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் கிறேடரின் வருமானம் தொடர்பாக ரூபா 174,590 இற்கான நிலுவை தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஜே.ஸீ.பீ. இயந்திரத்தின் வருமானம் தொடர்பாக ரூபா 214,095 இற்கான நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பாதைகள் தகர்க்கும் இயந்திரம் மூலம் பெற வேண்டிய வருமான தொடர்பான நிலுவை தொகையாகிய ரூபா 275,580 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம் ரூபா 40,543 இற்கான முற்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 58,454 ஆக காணப்பட்டதுடன் 01 வருடத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,277 ஆகும்.

| விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| உள்நாட்டு ஆணையாளர் | 5,598 |
| சம்பள மீளளிப்பு(உள்ளூராட்சி ஆணையாளர்) | 16,679 |
| மொத்தம் | 22,277 |

(ஊ) சபையின் அதிகார பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வர்த்தக விளம்பர அறிவித்தல் பலகை ஐந்து தொடர்பாக நிலுவை விளம்பர அறிவித்தல் கட்டணம் ரூபா 276,300 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 77,514,989 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,574,158 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,135,487 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி | 3,200,000 | 3,392,984 | 2,520,572 |
| (ii) | வாடகை | 1,928,600 | 1,729,205 | 2,246,113 |
| (iii) | ஏனைய வருமானங்கள் | 42,465,769 | 41,951,135 | 15,618,181 |
| | | 47,594,369 | 47,073,324 | 20,384,866 |

2.3 வீதவரி

----------

2005 முதல் 2013 வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,229,240 இற்கான நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்வேறு கட்டளை சட்டங்களின் கீழ் வவுனியா நீதிவான் நீதிமன்றங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட ரூபா 2,889,459 இற்காகன நீதிமன்றத் தண்டப்பணத்தினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயத்திடம் பெற வேண்டிய ரூபா 9,537,497 இற்கான முத்திரை கட்டணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மைகள்

------------------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் போது கணிசமான எண்ணிக்கையான பணம் அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்று காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு,

| மாதம் | செலவு | மாத இறுதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஜூன் | 5,348,108 | 9,598,177 |
| ஜூலை | 4,854,911 | 10,259,866 |
| ஆகஸ்ட் | 6,844,953 | 9,573,162 |
| செப்டம்பர் | 9,904,013 | 6,685,710 |
| ஒக்டோபர் | 4,900,383 | 5,130,124 |
| நவம்பர் | 3,336,865 | 6,589,608 |
| திசெம்பர் | 8,059,936 | 6,672,425 |

(ஆ) ரூபா 82,750 இற்கான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

2013 அக்டோபர் 31 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 110,000 பெறுமதியான டிரக்டரின் இரண்டு பகுதிகள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் இவ் அறிக்கை திகதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சுத்தம் செய்யும் சேவைக்காக உடல் ஆரோக்கியத் தொழிலாளர்களுக்கு ரூபா 2,539,151 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. இது தவிர தனியார் சுத்தம் செய்யும் சேவைக் கம்பனிக்கு ரூபா 427,200 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஆ) பிரதான பேரேடு பேணப்படல்

(இ) வருமானம் சேகரித்தல்